**சார்பு நீதிமன்றம், பரமத்தி**

**O.S.No. 113/ 2022**

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 01–ம் நாள் செல்வராஜ் என்பவரின் நிரூபண வாக்குமூலம், 2002–ம் ஆண்டு, உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18–ன் கீழ் திரு.சி.சதீஸ், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | ரிக் தொழில் |
| த.பெயர் | : | ராசப்பன் | ஜாதி | : | – |
| ஊர் | : | அர்த்தனாரி பாளையம் | சமயம் | : | |
| வட்டம் | : | பரமத்தி வேலூர் | வயது | : | 54 |
| மாவட்டம் | : | நாமக்கல் | | | |

வாதி, அவர் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலம் மூலமாக, வாதி தரப்பு முதலாவது சாட்சியாக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

1) எனக்கு கடந்த 23.01.2022–ம் தேதியில், முதலாவது பிரதிவாதியின் குமாரரான சீனிவாசன் எழுதிகொடுத்திருக்கிற பிராமிசரிநோட்டின் அசல், வா.சா.ஆ.1. நான், கடந்த 22.08.2022–ம் தேதியில், வா.சா.ஆ.1– பிராமிசரிநோட்டில் கண்ட தொகை வகையறாக்களை கோரி பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பின் அலுவலக நகல், வா.சா.ஆ 2. அதை இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டார்கள் என்பதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்கள் முறையே வா.சா.ஆ.3 மற்றும் 4. வா.சா.ஆ.2–அறிவிப்பை முதலாவது பிரதிவாதி பெற்றுக்கொள்ளாததால் திரும்ப வந்த கவரின் அசல், வா.சா.ஆ.5.

2) எனக்கு கடந்த 29.08.2022–ம் தேதியில், இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பின் சார்வு நகல், வா.சா.ஆ.6. அதற்கு நான், கடந்த 05.09.2022–ம் தேதியில், அனுப்பிய ரீஜாயின்டர் அறிவிப்பின் அலுவலக நகல், வா.சா.ஆ.7. அந்த ரீஜாயின்டர் அறிவிப்பை இரண்டு முதல் நான்கு பிரதிவாதிகளின் வழக்குரைஞர் பெற்றுக் கொண்டதற்குண்டான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல், வா.சா.ஆ.8. பிராதுப்படி தீர்ப்புச்செய்ய வேண்டுகிறேன்.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him/her to be Correct.

G PRABHAKARAN

Digitally signed by G PRABHAKARAN
Date: 2024.03.01 16:54:13 +0530

Sub Judge,
Paramathy